**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>**

**முன்னிலை: திருமதி.பி.கே. தமயந்தி,எம்,ஏ.,பி.ல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ம் நாள் புதன்கிழமை**

**<u>இ.ம.எண். 5/2022 இன் அ.வ.எண்.410/2020</u>**

1. மணி
2. திருமலையம்மாள்
3. செல்வராஜ்
4. ராஜேந்திரன்
5. ஜெயக்கொடி
6. முத்துலட்சுமி
7. பொன்னம்மாள்
8. மகாமுனி . . . மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. தங்கராஜ்
2. ஜெயலட்சுமி
3. பிரேமா
4. சுப்பரமணி
5. ஆறுமுகம்
6. மாரியாயி
7. வீரம்மாள்
8. சம்பூர்ணம்
9. சுப்பம்மாள்
10. செல்வராஜ்
11. வீரபாண்டியன்
12. கனகராஜ்
13. செல்வராணி
14. சரோஜா
15. செல்லம்மாள்
16. பரமசிவம்
17. பொன்னுசாமி
18. சங்கப்பிள்ளை . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு 13.9.2022 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு

வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.தேவராஜன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல்6,8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.பூபாலன், அவர்கள் ஆஜராகியும், 7, 9 முதல்13 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.இளங்கோ, அவர்கள் ஆஜராகியும், 14 முதல்16 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சசிகுமார், அவர்கள் ஆஜராகியும், 17,18 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினராக உத்தரவிட்டும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அபிடவிட்டில் கண்ட காரணங்களுக்காக மேற்படி நெம்பர் தாவாவில் உரிய காலத்தில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யாததை மன்னித்து இத்துடன் தாக்கல் செய்யும் ரிப்ளை ஸ்டேட்மெண்ட்டை ஏற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுதாரர் தரப்பு மனு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:

நான் இம்மனுவில் மனுதாரர்/தாவாவில் 1ம்வாதி. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பேரில் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி நெம்பர் தாவா மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக வழக்கு ஆவணங்களை படித்து பார்த்த பொழுது தான் தாவா 7, 9 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாவாச் சொத்தினைப் பொருத்து ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றிருப்பதாகவும், வழக்கு சொத்து 11ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு வாய்மொழி கிரயப்படி பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். அது குறித்து மனதாரர் தரப்பில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யாமல் விடுப்பட்டுள்ள விவரம் தற்பொழுது தான் தெரிய வந்தது என்றும் மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தற்செயலாக ஏற்பட்ட ஒன்றாகும். மேற்படி தாவாவில் தாக்கல்

செய்துள்ள பதிலுரைக்கு மனுதாரர் தரப்பில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்தால் தான் மனுதாரர் தரப்பு கட்சியினை எடுத்துரைக்க இயலும். ஆதலால் மனுவுடன் தாக்கல் செய்யும் ரிப்ளை ஸ்டேட்மெண்ட்டை ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டியது அவசியமாகிறது. இல்லையெனில் மனுதாரருக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும் எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 11ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மறுப்புரை: (இதனை 7, 9,10,12,13 எதிர்மனதாரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்)**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கில் இப்பிரதிவாதியானவர் தரப்பில் 24.10.2019 தேதியில் பதில் உரை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி பதிலுரையில் 11ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஞானசேகரன் என்பவரிடம் இருந்து வாய்மொழி கிரயமாக பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளோம். அதனை ஆட்சேபனை செய்ய ஞானசேகரனுக்கு தான் உரிமை உண்டோ தவிர மனுதாரர்களுக்கு எவ்விதமான உரிமையும் ஏற்படபோவதில்லை. மேற்படி தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் ஞானசேகரன் ஆவார். மேற்படி விவரத்தை மறைத்து வாதிகள் அசல் தாவாவினை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி விவரம் அனைத்தும் பதிலுரையில் குறிப்பிட்டு அதை பொருத்து சமூகம் கோர்ட்டில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன. அசல் தாவாவினை வாதிகள் 17.4.1964 தேதியிட்ட கிரய ஆவணம் மூலம் பாக பாத்தியம் கோரியுள்ளனர். அதனால் தற்போது வாதிகள் தாக்கல் செய்துள்ள ரிப்ளை ஸ்டேட்மெண்டில் 20.11.1989 தேதியிட்ட கிரய ஆவணத்தின்படி பாத்தியம் என குறிப்பிட்டுள்ளார். ஆதலால் சமூகம் கோர்ட்டில் வாதிகளின் நிலைபாடு என்ன எந்த ஆவணம் மூலம் பாகப்பிரிவினை கோருகின்றனர் என்ற விவரம் தாவா பிராதில் தெளிவாக குறிப்பிடவில்லை. அசல் வழக்கானது 2019ம் வருடமே தாக்கல் செய்த போதிலும் வழக்கினை வாதிகள் விசாரணை மேற்கொள்ள முன்வராமல் இம்மனுவினை தாக்கல் செய்தது சட்டப்படி ஏற்ககூடியதல்ல. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**4. இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே ஆகும்.**

மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக தாவாவில் உரிய காலத்தில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யாததை மன்னித்து இத்துடன் தாக்கல் செய்யும் ரிப்ளை ஸ்டேட்மெண்டை ஏற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரின் பிரமாண பத்திரத்தில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பேரில் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா 7, 9 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாவா சொத்து 11ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு வாய்மொழி கிரயப்படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளதாகவும் ஆகவே அதைப்பொறுத்து ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யாமல் விடப்பட்டுள்ள விவரம் தற்போது தான் தெரிய வந்ததாகவும் ஆகவே உரிய காலத்தில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுவில் 1 முதல் 6, 8 மற்றும் 14 முதல் 16 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுவுரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 11ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டு 7, 9, 10, 12, 13 எதிர்மனுதாரர்களால் அவர்களுடையதாக பாவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 24.10.2019ம் தேதியில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி பதிலுரையில் 11ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஞானசேகரன் என்பவரிடமிருந்து வாய்மொழி கிரயமாக பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளதை ஞானசேகரன் தான் ஆட்சேபனை செய்ய உரிமை உண்டே தவிர மனுதாரர் / வாதிகளுக்கு உரிமை ஏற்படப்போவதில்லை. தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் ஞானசேகரன் ஆவார். மேற்படி விவரங்களை மறைத்து அசல் தாவாவை தாக்கல் செய்துள்ளனர். மேலும் அசல்

தாவாவில் வாதிகள் 17.4.1964 தேதியிட்ட கிரய ஆவணம் மூலம் பாகபாத்தியம் கோரியுள்ளனர். ஆனால் தற்போது வாதிகள் தாக்கல் செய்துள்ள ரிப்ளை ஸ்டேட்மெண்டில் 20.11.1989 தேதியிட்ட கிரய ஆவணத்தின்படி பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

வழக்கு ஆவணத்தை ஆராய்ந்து பார்க்கும் போது தாவா கடந்த 15.5.2019ம் தேதியில் பாகப்பிரிவினைக்கும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வழக்கில் 6.12.2019 தேதியில் 7, 9 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த ஒருதலைபட்ச உத்தரவு நீக்கரவு செய்யப்பட்டு 11ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையின் அடிப்படையில் 8.1.2020 தேதியில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்படி அசல் வழக்கானது நாளது வரை விசாரணை துவங்கப்படவில்லை என்பது வழக்கு ஆவணங்களின் மூலம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிப்ளை ஸ்டேட்மெண்டில் கண்டுள்ள சங்கதிகள் வழக்கின் தன்மையை பாதிப்பதாக உள்ளது என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிபடவில்லை. மாறாக அசல் தாவாவில் வாதிகள் 17.4.1964 கிரய ஆவணம் மூலம் பாக பாத்தியம் கோரியுள்ளதாகவும், தற்போது ரிப்ளை ஸ்டேட்மெண்டில் 20.11.1989 தேதியிட்ட கிரய ஆவணத்தின்படி பாத்தியம் என குறிப்பிட்டுள்ளதாகவும் வாதிகளின் நிலைப்பாடு என்ன என்பதையும் எந்த ஆவணம் மூலம் பாகப்பிரிவினை கோருகின்றார் என்ற விவரம் பிராதில் தெளிவாக கூறப்படவில்லை என்றும் ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டுள்ள விசயங்கள் குறித்து வழக்கு விசாரணை முடிவில் தான் தீர்மானிக்க இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், தரப்பினர்களுக்கு அவர்களது

வழக்கை எடுத்துரைக்கவும், சாட்சிகளை விசாரிக்கவும், ஆவணங்களை தாக்கல் செய்யவும் உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனுதாரரின் மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தேசிக்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2022ம் வருடம் செப்டம்பர் மாதம் 14ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2022.09.15 10:33:55 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. **மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** ––இல்லை––
2. **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** ––இல்லை––

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2022.09.15 10:34:08 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**